Source: *Tamil Murasu,* p3
Date: 17 July 2021

தொழில்முனைப்பு, புத்தாக்கத்தை ஊக்குவிக்க என்யுஎஸ் கூட்டணி

புத்தாக்கத்தையும் தொழில்முனைப்பையும் ஊக்குவிக்க, இரண்டு பிரசித்தி பெற்ற இந்தோனீசியப் பல்கலைக்கழகங்களுடன் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் இணைந்து செயல்படவுள்ளது. இதன் தொடர்பில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் இந்தோனீசியப் பல்கலைக்கழகம் மற்றும் கட்ஜா மடா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் படிக்க சிங்கப்பூரில் வாய்ப்பளிக்கப்படும். இந்தோனீசிய கல்வி, கலாசார, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சில் உயர்கல்விப் பிரிவின் தலைமை இயக்குநராக உள்ள பேராசிரியர் நிஸாம் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. புத்தாக்கத் திறன், உற்பத்தித் திறன் இரண்டையும் கொண்ட குடிமக்களை உருவாக்குவதில் அடையும் வெற்றியை நம்பியே ஆசியானின் எதிர்காலம் உள்ளதென அவர் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.